கடவுள் துணை.

தேவநாம சங்கீத

# பக்திரசக் கீர்த்தனம்.

## இந்துஸ்தான் வர்ணமெட்டு.

மதுரை

அவுனியாபுரம்

**P. மனுவேல் என்பவர்**

இயற்றியதை

திருநெல்வேலி

செந்தமரம் கிராமம்

கனம் **A. M.** ஜோஷப் கார்பெண்டரவர்கள்

விருப்பத்தின் பேரில்

மதுரை

ரஸில் பதிப்பிக்கப் பெற்றது

1923

N23
178968

# முகவுரை.

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமும் உள்ள நமது பரம பிதாவாகிய யேசு பெருமானுடைய திருவருளை முன்னிட்டு அவர் பேரில் ஸ்தோத்திரக் கீதங்களாக சில பாடல்களை இந்துஸ்தான் வர்ணமெட்டுகளைக் கொண்டு இயற்றி தேவநாம சங்கீத பக்திரசக் கீர்த்தனம் என்று பெயரிட்டு அச்சிடப்பட்ட இப்பாடல்களில் யாதாமொரு குற்றங்களிருக்குமாகில் அறிஞர்களாகிய தாங்கள் தங்களுடைய குழவி போலாக என்னைப் பாவித்து குற்றத்தை நீக்கி குணத்தைக் கைக்கொள்ளும்படியாக பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம் உங்களன்புள்ள

P. மனுவேல்

அவுனியாபுரம்

மதுரை

# தேவ நாமா சங்கீத
# பக்திரசக் கீர்த்தனம்.

## கடவுள் துதி.

### வெண்பா.

எத்திசை யெல்லாம் புகழும் யேகபரிபூரணனே
பக்திரசக் கீர்த்தனங்கள் பாடுதற்கு—உன்சித்தம்வைத்து
முத்தி கொடுத்தேயருள முன்னடைவாய் எந்தனுக்கு
நித்தியானந்தக் கடவுளே நின்னடி தொழுதேன்.

### ஆசிரிய விருத்தம்.

அண்டசாரசரங்களெல்லா மருள்மயமாய் விளங்கும்
ஆதிபராபர மெய்ஞான சோதியும் நீயே
அருமறையெல்லா முறைக்க அத்தியக்ஷராக வந்த
அனாதி சடிலனெனும் அருமை ரட்சகரும் நீயே
மண்டலத்திலே சிறந்த மாதா பிதாவும் குருவும்
மாசில்லாத் தெய்வமும் நீயே
மன்னுயிர்க்காகவே தன்னுயிரை கொடுக்க
மாமரியாளுந்தியிலுதித்த சேயனும் நீயே
தொண்டருக்குத் துணையுரியத் தொல்லுலகில்
தோன்றிய தோளரும் நீயே
துன்புறச்சிலுவையில் துயறப்பட்டுத்தொங்கிய
துய்ய தீபனும் நீயே,
தெண்டம் பணிந்தேனுன் திருவடியில்
தீபபாதக நானுனேயே

தேவாதி தேவனே திவ்ய சொரூபனே
திருக்கடைக்கண் பாருமய்யனே.

இராகம்—தோடி—தாளம்—ரூபகம்

பல்லவி

தேடிவந்தேன் தேவ பாலகனே—உம்மைக்

அநு பல்லவி

கோடிசரணம் புரிய பாடியே யுலகின்மீது—தேடி

சரணங்கள்.

1 கருணாகரனே பரனே கார்த்திடும்பரிபூரணனே
மறுரூபமாக வந்த மாசில்லாத்திருத்துவனே (தே)

2 நித்திய சருவேஷனனே நத்தினேன் கிருபாசனனே
எத்தினமுமே துதிக்க ஏகசுதனே வுந்தனைத் (தே)

3 துற்குணங்களைப்போக்கி சுத்தஞான முண்டாக்கி
நற்குணங்களைக் கொடுக்க நாயகன் திருவடியை (தே)

4 அனுமித்தியமனுவேல்பணி அமலாவிமலாயிப்பிணி
யனுக்கிரகித்தாழ்பரனேயண்டினேன் தினமுந்தனை (தே)

(2) இராகம்—இந்துஸ்தான்—கவாய்—தாளம்—ரூபகம்

நாதன் வரவுங்காணேனே—யென்ற மெட்டு

பல்லவி

தேவா உன்பாதம் நம்பினேன்
திருச்சுதனே தேவா

மூவா முதல்வோனே முத்திதருஞ் சீலனே
காவா கருணைமிகுந்தோனே திருச்சுதனே (தேவா)

சரணம்

1 மாசில்லா மகிபனே மாமரி புதல்வோனே
நேசித்தருளும் பூமானே திருச்சுதனே (தேவா)

2 பாவியாகினேனுனே பாது காத்திடுங்கோனே
சேவித்தடி பணிந்தேனே திருச்சுதனே (தேவா)

3 அன்பான ரட்சகனே அருள்மேவுங்காரணனே
இன்பந்தந்திடுஞ் சீமானே திருச்சுதனே (தேவா)

4 நேசவிசுவாசனே நித்ய சருவேசனே
பசாமிகுந்த கோமானே திருச்சுதனே (தேவா)

(3) இராகம்—தேசிகம்—தாளம்—ரூபகம்
ஜோர் ஜோர்—என்ற மெட்டு

பல்லவி

தேவா திருக்கடைக்கண் கொண்டு தினமென்னைக்கார்த்திடவா

அநுபல்லவி

காவா யென்னையித்ததியிலேவந்து கருணைபுரிந்துமேகவலைதனைதீர்க்க

சரணம்

1 கண்ணி மரியாள் சுதனே
காரணந்தெரிந்த கோனே
பண்ணின கொடிய பாவந்தானே
பாவியலைகின்றேன் கோபியாமலென்னை (தேவா)

(தொகையரு)

காமியான்படும் பாடு காசினிலே கார்க்கவொண்ணுதோ
தாமிதமின்றியே வந்தென்னைத் தாபரிக்கவொண்ணுதோ

(பாட்டு)

2 தஞ்சம் வேறுனை யல்லாது
தாரணியி லெனக்கேது
நெஞ்சம்புண்ணுகி வருந்தினேனிப்போது
நீசனுனே திடுங் கவிக்கருள் தாருந் (தேவா)

(4) இராகம் இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி
சும் சும் சும் பியாரி யென்ற மெட்டு

பல்லவி

பார் பார் பாரேசு பாரெல்லாம் புகழும்படி
பாலனுப் பிறந்தா ரென்ன சீர் சீர் சீர் [பார்

அநுபல்லவி

1 பரலோக வாசர் பக்த ரட்சகர்
பலருக்கும்நேசர் பாபவிமோஷனர்
பார்தனிலடியேன் துதிக்குஞ்சர்வேஷர்
பரம குருவே நேசக் கிறிஸ்தெனுமதிபதி (பார்)

2 ஏசு நாயகர் எங்கும் பிரகாசர்
ஏக திருத்துவ ரான மருத்துவர்
ஏழைகள் துண்பந் தீர்த்திடுங் கர்த்தர்
எளியவர் குல மதிலிசைவுடன் புல்லின் மீது (பார்)

3 திவ்விய பாலகர் திருமனுவேலர்
திருச்சுதனானவர் தீனதயாளர்
தீயபாதகர் வினைகளை தீர்ப்பவர்
திருவுருவாக யேசு மனுடவதாரமாய் (பார்)

---

5 திருப்புகழ் சந்தம் தாளம்—ஆதி
மருவே செரித்த யென்ற மெட்டு

கண்ணிகள்

1 ஏசுக் கிறிஸ்து நேசக்குமாரனான தாவீதின் மகிபாலா
மாசுமறுவில்லாத சுதனே மதழைக்கிரங்கு மனுவேலா (ஏ)

2 அறிவிர்ச்சிறந்த குருவே யமைந்த பொருளேயனுதிரக்ஷண்யா
சிறியேனுந்தனைத்திடமா யெண்ணினேனாசீர்வதியும் காருண்யா (ஏ)

3 பரிபூரணனே உமையே நம்பினேன் கிருபாசனனே பரமேசா
பக்தியுடனே மெத்தப் புகழ்ந்தேன் பாதுகாருமே ஜெகதீச (ஏ)

---

6 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் சாப்பு
டேரே நாமமகமது—யென்ற மெட்டு

கண்ணிகள்

1 இங்கிலந்தன்னிலே நன்னயமாகவே
இன்பசுதன் பிறந்தார்
உன்னதமாக நாம் பாடித்துதித்திட
உத்தமனார் பிறந்தார்

2 ஆட்டிடையர் வந்து பார்த்திடவே
ஆயரன்பாக கொண்டாடிவே

மாட்டுக் கொட்டலிலே தாஷ்டீகமாகவே
மைந்தன் மகிழ்ந்திடவே

3 வான நட்சத்திரம் வெளிச்சக்கொள்ள இருள்
வல்லிடிகள் முழங்க
ஞானமுடனே ஜெகந்தனிலே வந்து
மானிடராய் விளங்க

4 சாத்தான் வல்லமை குறைந்திடவே
சன்மார்க்கம் நிறைந்திடவே
காத்து ரட்சிக்கும் கருணாகரின் பிர
தாபந் துலங்கிடவே (இந்)

---

(7) இராகம் பார்வி இந்துஸ்தான் தாளம் ஆதி
ஆயேசையா—யென்றமெட்டு

பல்லவி

காருந்தேவா கதியருள வாவா கன்னிமரியின்புதல்வா
வருமைபொழியத் தயை கூறும்
திருக்கண்ணாலென் தனையுமே பாரும்
சித்தங்கலங்கினேனே
நத்தாசை வைவ பூமானே
பத்தியாய்ப் பணிந்தேனே
பரினிலே நேசமதாய் தாசன் துதி போற்றிடவே (காரு)

(8) இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

தேக்குங்கிமோரா வென்ற மெட்டு

பல்லவி

ஏசுவே யென்னை யாழாயித்தருணம் (ஏசு)

அநுபல்லவி

1 மாசு மறுவில்லாத மாமரி பாலனே
பாசமுடனே போற்றி பாசமுடனே போற்றி
நீசனுனுந்தன் நின்னடி தொழுதேன் தினம் (ஏசு)

2 நேய குமாரா நித்திய கிருபாகரா
ஆயர் குலத்துதித்த ஆயர் குலத்துதித்த
சேயனே வுந்தன் சேவடிக்கே செஞ்சரணம் (ஏசு)

3 சாமியண்டினேனிந்தச் சமயமுனே நம்பினேன்
தாமிதமேனோ யினித் தாமிதமேனோயினிக்
காமியெந்தனுக்காதரவு யாருமில்லை (ஏசு)

4 தாலந்தனிலுதித்த தற்பரனே யுமக்கு
பாலன் பணிந்து துதி பாலன் பணிந்து துதி
சீலமுடனே செப்பினேன் ஜெகம் புகழ (ஏசு)

(9) இராகம் மோகனம்—தாளம்—ஆதி

வந்தனங்கள் தந்தேனிதோ—என்ற மெட்டு

பல்லவி

இந்த நாளில் சந்தோஷமாயிங்கு வாருமே

அநுபல்லவி

எந்த நேரமுந்தானே உந்தனைத்தொழுதேனே (இங்)

சரணம்

1 அந்தரலோகத்திருந்து இந்தவுலகத்தில வந்து
நிந்தனை வராமல் காத்து நீசனுக்கருள் புரிய (இங்)

2 தேவ குமாரனே திவ்ய சொரூபனே
பாவதுரிதகோப பரமதயாளனே (இங்)

3 சிங்கார ரூபனே சிந்தைமகிழ்ந்தானே
பங்கமில்லா தமிழை பாடினேன் சீமானே (இங்)

10 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்
ஆயமூஜே தர்தேஜி யென்ற மெட்டு

கண்ணிகள்

1 தேவமரியாள் சுதனே திவ்யதிருப்பாலா
ஆவலுடனே பணிந்தேன் சீலா-உன்னை
ஆவலுடனே பணிந்தேன் சீலா (தே)

2 மண்ணுருவமாக வந்த மகிபனே யேசுநாதா
தண்பதந்தந்தென்னை யாளும் போதா—இனித்
தன்பதந்தந்தென்னை யாளும் போதா (தே)

3 அந்தகனுக் கொளிகொடுத்த ஆதிபரமேசா
சுந்தரனே சுகந் தாருமீசா—எந்தன்
சுந்தரனே சுகந் தாருமீசா (தே)

4 தாசன் புகழுங்கவிக்கித் தருணமருள்தாரும்
பாசமிகுந் தென்னைப் பாதுகாரும்—உந்தன்
பாசமிகுந் தென்னைப் பாதுகாரும் தாச (தே)

(11) இராகம் தேசிகம் தாளம் ஆதி

ஐஷே நாலே நாலே யென்ற மெட்டு

பல்லவி

ஆதி யமலா விமலா ஆண்டிடுமேசு நசாயனதிபதி
அன்னைமரியின்பாலாஎந்தனுக் கருள் செய்யுமனுகூலா [ஆ

அநுபல்லவி

1 தாவீதின் குலத்துதித்து தானேப்ரகாசித்தவா
பூவினிலே மானிடர்க்காய் பிறந்துயிரை யீந்தவா
பாவியே கூவியும் மேவியிங்கு நாடினேன்
பாலனென்னை யாள்—ஆதி

2 பாருலகையாள வந்த பாமகுருநாதனே
ஆருதனுடனே வந் தருள் புரியும் நீதனே
சீருடன் பணிந்து செந்தமிழைப்பாடினேன்
சிறியனென்னையாள்—ஆதி

(12) இராகம் தேசிக முகாரி தாளம் ரூபகம்

ஆறுமுக வடிவேலவனே யென்ற மெட்டு

கண்ணிகள்

1 ஆதாமின் பாவத்துக்காகவே சாபத்தையழித்தபராபரனே ஜெக
நாதாவுன் பாதத்தைக் கண்டுதரிசிக்க நம்பிவந்தேனுனே (ஆதா)

2 பாவிநானுந்தனைக் கூவியழைத்துப்பரதவிக்கின்றேனுனே இந்தக்
காவிலலைந்துமே கஷ்டப்படுகின்றேன் கார்த்தருளுங்கோனே ஆ

3 தாபத்தைத்தீர்த்துத்தயைபுரியுமெந்தன் தாவீதின்குமாரனேஎந்த
ஞுபத்துக்கருள்தந்து ரட்சியு மெந்தனன்னை மரிசுதனே (ஆதா)

4 பாசமிகுந்திடும் நேசக்குமாரனே பாலனெனைக்காவா உந்தன்
தாசன் புகன்றிடும் மாசற்ற கவிக்கும் மங்களம் கூர்ந்திடவா ஆ

---

13 இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி

நானிருந்தென்ன லாபம் யென்ற மெட்டு

பல்லவி

வரந்தரு மேசு ரூசா எந்தன்
வன்வினை தீரு மீசா வரந்

அநுபல்லவி

1 பாரந்தனிற் சேறிய பரம தயாளா
சிரம்பணிந்தேனருள் செய்யனுகூலா
அறமிகுந்த சீலா அன்னைமரிபாலா
திரமில்லாப்பாவி நான் தியங்கித் தவிக்கின்றேன் (வரந்)

2 தேவ குமாரனே தீவினை தீரும்
பாவவிமோசனங்கள் பரிவுடன் தாரும்
நாவலர்க்கதிபதி நாயனெனைக்கண்பாரும்
காவலனுகவேநீர் கார்த்தருள்புரிந்திட (வரந்)

3 தஞ்ச மென்றுந்தனை கெஞ்சினேனனே
சஞ்சலம் நீங்கிட சமயமிது சீமானே
நெஞ்சமிறங்கியே நேசித்திடும் பூமானே
பஞ்சைபோலலைகின்றேன் பாவியானுந்தானே (வரந்)

14 இராகம் இந்துஸ்தான் காபி தாளம் ஆதி

அம்பாள் மதுரை மீனாக்ஷி யென்ற மெட்டு

கண்ணிகள்

1 கன்னிமாமரியின் சுதனே உம்மை
எண்ணியே துதித்தேனே சீமானே
சென்னி கவிழ்ந்து நானே
பண்ணினேன் ஜெபந்தானே பண் பண் கன்னி

2 பாருலகில் வந்த மெய்யா எனக்
காருந்துணையில்லையா காரய்யா
சிறுமையடைந்தே னய்யா
வருமை தீருமய்யா வருமை வருமை கன்னி

3 நேசரூ ஜனே கண் பாரும் விசு
வாசனே வினை தீரும் அருள்தாரும்
தாசன் பணிந்து கூறும்
மாசற்ற கவிக்கிரங்கும் மாசற் மாசற் கன்னி

15 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ரூபகம்

ஆயநாதா பீரஸ்காந்தே யென்ற மெட்டு.

கண்ணிகள்

1 தேவ மரியாள் சுதனே தேடினேன் தேவா
பாவலன் பணிந்து பதம் பாடினேன் காவா (தே)

2 மாசற்ற திருத்துவத்தோ ரான மகிபனே
நீசனுக்கருள்புரியும் நிமல நாதனே (மாச)

3 ஏழையுன்றன் பாதம் பணிந்தேற்றினேனுதா
வேளை எந்தன் மீதிரங்க வேணுமே நீதா [ஏழை

4 அண்டசராசரங்களெல்லா மாண்டிடும் பாலா
தொண்டன் புகழுந்தமிழுக் கருளனுகூலா (தேவ)

---

(16) இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் சாபு
பேக்கியாவலா பாவலா யென்ற மெட்டு

பல்லவி

திருச்சுதனையேசு ஜெகதீசா உந்தன்
திருவடி பணிந்தேனே பரமேசா (திரு)

அநுபல்லவி

1 கருணை மிகுந்த போதா கடைக்கண் பாருமே தேவா
அருமைச்சுதனே யன்னை மரி பாலனே
சிறுமையதனைத் தீருஞ் சீமானே (திரு)

2 பாவ விமோஷனமே பண்பாயழித்திடுமே
தேவகுருவே திரி முதல் பொருளே
காவலனாக நீரும் கார்த்தருளே (திரு)

4 நேய குமாரனே நிதமுனைப் பணிந்தேனே
சேயன் செய்திடுந் துதிக்கருள்வாயே
மாயமாக யென்னிடம் வருவாயே (திரு)

---

17 இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி
மலடி வயிற்று மகன் போலே யென்ற திருப்புகழ் மெட்டு

கண்ணிகள்

1 நாரூபமாகியே நலிந்தோனே மா
மாச்சிலுவையதினில் மரித்தோனே தேவா
வரந்தா இதுததி சீமானே யருள் பூபாலா (நர)

2 ஆதியந்தமில்லாத கோமானே இந்த
மாதிரந்தனில் மன நொந்தேனே உம்மை
ஓதியே துதித்துமே வந்தேனே இங்கு வருவாயே (நா)

3 பத்தியதாக படித்திடவே நாதா
எத்தினமுந்தொழு தேத்திடவே நிதம்
நித்திய ஸ்தோத்திர முடித்திடவே நீர் நிலைதானே (நா)

4 மாட்சிமைகள் மிகுந்த பூமானே உந்தன்
சூட்சந்தெரிந்துமே நான் துதி செய்தேன் தேவா
காட்சிகளைக்கண்டுமே களிகூர்ந்தேன் கதிதருவாயே (நா)

18 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்
அச்சாபோரி லாகிவேஷ யென்றமெட்டு

பல்லவி

இங்கிலமெல்லாம் புகழுமேசுநாதசுவாமியே
சுவாமியே யேசு சுவாமியே (இ)

அநுபல்லவி

1 துன்ப மடைந்து நான் தூய தாளை வேண்டினேன்
இன்பமுடனே யென் னிருதயத்தைக் காருமே (இங்)

2 தஞ்ச முந்தன் பாதமல்லால் தாரணியிலேது மில்லை
நெஞ்சமிரங்கியே நீசனைக்கண்பாருமே (இங்)

3 கருணைமிகுந்தவா காசினிலென்னைக்காவா
தருணமருள்புரிந் தனையன் துயர் தீருமே (இங்)

4 பரலோக நாதாவுன் பட்ச மறவாமல்
சரணை யேழையும் நாடிப்பதம் பாடினேன் (இங்)

19 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி
பஜாயிமே தில்பேலா யென்ற மெட்டு

கண்ணிகள்

1 வாரும் பரம குருநாதனே தேவா
காரும் பரிசுத் தாவிபூரணமாய் (வாரு)

2 இந்த நவ வருடந் தன்னிலே நான்
இன்பமாய்த் தொழுதேன் புவி மீதினிலே (வாரு)

3 கருணை திருக்கடைக் கண்பாரும் எந்தன்
வருமை தனை தீர்த்து வரந்தாருமோ (வரு)

4 பத்தியுடன் கீர்த்தனம் பாடவே உலகில்
நித்தியம் பஜனைக வீடேரவே (வாரு)

---

20 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்
பத்திசாதிக்கவிடாது யென்ற மெட்டு.

கண்ணிகள்

1 அன்னை மரிசுதனே தேவா நீயு
மென்னை ரட்சித்திடவும் வாவா
நன்னயமாகவே நாடியுன்னிடம் வந்தேன்
இன்னல்வராமலெந்தனிறைவனே! காத்தருள (அ)

2 ஆதிபராபரனே சீலா அ
ருதிக்கிரங்கு மனு கூலா
வேதியர் நீதனே வேண்டினேனுந்தனை
மேதினியிலெந்தனுக் காதரவு புரிய (அ)

3 தாவீதின் குமாரனே நாதர் இந்தப்
பாவிக்கருள் புரியும் நீதா
பூவிலலைந்துமே புலம்பித் தவிக்கிறேன்
சேவித்துச் சிறியனுஞ் சேவடி பணிந்தேனே (அ)

---

21 இராகம் பார்ஸி தாளம் ஆதி
சல்பல்கே பியாரிதேரி யென்ற மெட்டு

கண்ணிகள்

1 தேவமரியாள் சுதனே திவ்ய திருப்பாலகனே
ஆவலுடன் அன்புதர வா வா வா
சேவடி சரணஞ் செய்தேனே (தே)

2 சத்ய சருவேசனனே நித்யகிருபாஷனனே
நத்தியே வுனைப்பணிந்தேன் கார் கார் கார்
எத்தினமுமுனை யேற்றினேன் (தே)

3 மாசில்லா மருத்துவனே மானிலம்புகழுங்கோனே
நேசித்துமே ஆசீர்வாதந் தா தா தா
காசினிலுந்தனையும் புகழ்ந்தேன் (தே)

---

22 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்
தெசு மாரே தும் ரெகுவாஞ யென்ற மெட்டு

பல்லவி

ஏசுநாதாவுன் னடைக்கலமே
எந்நாளுமே ஏசு

அநுபல்லவி

1 நேசவிசுவாசனே நெடுநாளாய் நம்பினேனே
தாசனெளியனென்னைத் தருணங்கண்பாரு மேசுநா

2 காவா யென்னை யித்தறி கருணை மிகுந்தசோதி
தேவா வுந்தனைக் கூவித்தியங்குதென்னெஞ்ச மேசுநா

3 பூவில் வந்த வினோதா புனிதமிகுந்த நீதா
பாவியழைத்தேன் தேவா பாதுகார்த்திடு மேசுநா

23 திருப்புகழ் சந்தம் தாளம் ஆதி
இசைந்தயேரும் கரியுறு போர்வை யென்ற மெட்டு

கண்ணிகள்

1 சிவந்த திரேகமும் படர்ந்த மார்புடனமைந்தோனே மிகச்
சிறந்த அங்கியும் வெண்ணிறமுடைய தாயணிந்தோனே (சி)

2 வல்லமை திருத்துவ சொல்லரும் கிருபையின் பிரதாபன் இந்த
வரனத்தைப் படைத்து ஞானத்தை உடைத்த மகிபாலன் (சி)

3 ஆதிசற்பத்தின் தலையையும் நசுக்கிடப் பிறந்தோனே இந்த
அகிலத்தின் பாவமனைத்துமே துலைத்திட வுதித்தோனே (சி)

4 பத்தருக்குபகாரனே வளர் பெத்தலேக்கதிகாரா உந்தன்
பாலகன் பாடும் நேசக்கவிக்கருள் ஜெயவீரா (சி)

24 இராகம் இந்துஸ்தான் காபி தாளம் ஆதி
அய்யா பழனிமலை வேலா யென்ற மெட்டு

கண்ணிகள்

1 யேசுநாயகனே தேவா எளி
யேனை யிந்தவேலை காவா

மாசுமறுவிலாத ஈஸவா உந்தன்
மலரடி பணிந்தேனே வாவா (யேசு)

2 சுந்தரமிகும் பொற் பாதா என்னை
சூழும்வினையகற்றும் நாதா
அந்தரங்கமான போதா உந்த
ஞசீர் வாதந்தரவொண் ணுதா (யேசு)

3 அண்டிவந்தேன் கிருஸ் தய்யா எந்த
ஞவலே தீர்த்திடு மய்யா
எண்டிசை புகழ்ந்திடு மெய்யா தினம்
யேற்றித்தொழுதேன் காரய்யா (யேசு)

25 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ரூபகம்
ராஜ ராஜ ராஜ யென்ற மெட்டு

பல்லவி

தாவீதின் குமாரனேயுன் தரிசனங்கண்டேன் தேவா

அநுபல்லவி

தஞ்சமென்றெண்ணியே சஞ்சலம் நீங்கிடச்
சந்தோஷங் கொண்டேன்

சரணம்

தினமனுதினமருள் மனமகிழ்தருள்புரி தேவ சுதன் மகனே
திருவடிதனைக் கண்டு மலரடி போற்றிட வரமருள் சீமானே
ஏழையனுதிகள்யாவர்கள் துதித்திடும் ஏக பராபரனே
எங்கும் புகழ்ந்திட மைந்தன் பாடுங்கவிதனக்கருள்வோனே
கவிதனக்கருள் வோனே
கருணையிற் பெரியோனே
கழலிணைப்பணிந்தேனே (தாவீ

26 இராகம் காம்போதி தாளம் ரூபகம்

கூவிவாய் குயிலே என்ற மெட்டு

பல்லவி

கருணைப்ரபுவே காரும் காருண்யவஸ்துவே கரு

அநுபல்லவி

தருணமிது சமய மிங்குவாரும் கரு

சரணம்

1. கன்னிமரியாள் வயிற்றில் பிறந்து
காசினுதனிலே வளர்ந்து
உன்னிதமான தொழிலதனைச்செய்து
உகந்து ஆலயங் கள்தோருந்திரிந்து
இந்நிலந்தன்னிலே பாவிகளுக்காக
இங்குரத்தஞ்சிந்தி துன்பமடைந்தோனே (கரு)

2 வானத்திலிருந்து மோனத்துடன் வந்து
ஞானத்தினில் மிகச்சிறந்து
வண்ட அளகையும் திண்டாட்டங் கொள்ள
மண்டலங்கள் சுற்றி எண்டிசைகளாட
தொண்டன் பணிந்து சொல்லுந்துதிகூட்
தொல்லுலகில் பஜனை கள் மிகப்பாட (கரு)

---

27 இராகம் தேசிகம் தாளம் ஏகம்

பாசுபதம் போல மதன் என்ற மெட்டு

கண்ணிகள்

1 அன்னை மரியாள் சுதனே ஆண்டருள்கோனே
அரும்பாவியானேனே உந்தன்
அருமைமறந்து சிறுமையடைந்து அலைகின்றேனனே அன்

2 பரமதயாபரனே பாரினில் தானே
பாதவிக்கின்றேனுனே சிறு
பாலனெந்தனை சீலமுடனே பாதுகார்த்திடுமே அன்

3 மானிடரூபந்தரித்த மாசில்லாப்பாலா
மனுவேலென்னுஞ் சீலா எந்தன்
மாசற்றதுதிக்காசீர் வதியும் மகிபனே லோலா மானிட அன்

28 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்
அரே ஷாதுமான் யென்ற மெட்டு

பல்லவி

நீதியே நித்ய பரி பூரண சோதியே

அநுபல்லவி

நித்தியஞ்சுகமில்லாமல் நத்தினேனுன்னையே நித்ய

சரணம்

1 ஆதிபராபரமெய் ஞானமோனமே மிகுந்த
அன்பனே அன்பனே அன்பனே அன்பனே
அண்டினேனுன்னையே தஞ்சம் வேறில்லை யுன்
செஞ்சரணம் செய்தேன் நெஞ்சமிரங்குவாய் நீதி

2 பாவிகள் துன்பந்தீர்க்க பாடுகள் மிகவே பட்ட
பக்தனே பக்தனே பக்தனே பக்தனே
பரமனே வுன திருமலரடி
பதமளித்திட வரமருளுவாய் நீதி

3 மானிட ரூபந் தரித்து மாசில்லா மகிமைபெற்ற
மகிபனே மகிபனே மகிபனே மகிபனே
மனமகிழ் வுடனிரு கரங்குவித்
தருளுமடியேன் தமிழைப்புகழ்ந்தேன் நீதி

29 இராகம் ஆரபி தாளம் ஆதி

முத்தி நெறியறியாத என்ற மெட்டு

கண்ணிகள்

1 தேவாதி தேவனே
திருச்சுதனே தினமுந்தனே
சேவடி பணிந்தேனே
ஜெகம் புகழுஞ் சீமானே தே

2 பாவியான் படுந்துயரம்
பாலகனே பார்க்கொண்ணாதோ
காவினிலே கஷ்டப்பட்டு
கலங்குகின்றேன் காக்கொண்ணாதோ தே

3 அன்பனே எந்தனுக்குத்
துன்பங்களுந் துயராமல்
இன்பமுடன் கீர்த்தனங்க
ளிதமுடனே படித்தேனே தே

4 தாலந்தனி லேசிறந்த
தாவீதின் புதல்வனே
சீலமுட னேயுந்தன்
சீர்பாதந் துதித்தேனே —தே

30 இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

உடுமலை முத்துசாமி பாட்டை யென்ற மெட்டு

கண்ணிகள்

1 தேவனருளிய குமாரா எந்தன்
பாவங்கள் விலக்கிடுஞ் சிங்காரா உந்தன்

சேவடிக்கே செஞ்சரணஞ் செய்தேனே யனுதினமும்
நானே மகிழ்ந் தேனே

2 ஏழைக்கிரங்கு மனு வேலா இந்த
வேளை வந்தருள் புரியுஞ் சீலா உந்தன்
தாளையுமடி பணிந்தேன் சீலமுடனெந்தனையும்
காரும் பதந் தாரும்

3 பத்தருக்குபகாரனே நீதா என்னை
சித்தம் வைத்து ரட்சியேசு நாதா உம்மை
நித்தமும் வணங்கிவந்தேன் சத்தியந் தவறிடாமல்
தேவா என்னைக் காவா

5 தாலந்தனிலுதித்த மெய்யா எந்தக்
காலத்திலுமே துதிப்பே னய்யா சிறு
பாலன் பாடிடுங் கவிக்குஞ் ஜாலம் செய்யாமலுமிங்கே
வாரும் களி கூறும் தேவ

---

31 இராகம் இந்துஸ்தான் பியாகு தர்ளம் ஆதி
முஜேதேத்தா கொய்காயா யென்ற மெட்டு

பல்லவி

ஏசுக்கிறிஸ்து நாதன்
எளியோரைக் கார்த்திடும்நீதன்

அநுபல்லவி

1 மாசற்ற மகி பாலன் அவர்
நேசமிகுந்திடுஞ் சீலன் விசு
வாசர்கட்கனு கூலன் ஏசுகிறிஸ்து

2 ஆவியான சர் வேசன் தீய
பாவிக்கிரங்கிடும் நேசன் இந்தக்
காவினில் விசு வாசன் ஏசுகிறிஸ்து
வேத கீத சி ங்காரன் ஜெக
நாதனே செம் பீரன் கொடும்
பாதகர்க்குப காரன் ஏசுகிறிஸ்து

---

32 இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் சாப்பு
தென்றலான புலி யென்ற மெட்டு

கண்ணிகள்

1 கன்னிமா மரியின் உன்னிதமானதோர்
பாலனே மனுவேலனே யனுகூலனே எந்தன்
கவலை யெல்லாம் நீங்க மதலையாக நீயும்
பிறந்தீரே அருள் தந்திரே

2 நீதனுனயேசு நாதனே ஞானப்ர
சாதனே சர்வலோகனே சருவேஷனே நேரில்
நீ வந்து முன் வினை பாவந்தனை தீர்ப்பாய்
சோதனை செய்தால் வேதனை

3 தாவீதின் சந்ததி மேவிப் பிறந்திட்ட
கர்த்தனே பரிசுத்தனே உனை நத்தினேன் உந்தன்
தாசன் யான் புகன்ற நேசக்கவிக்கருள்
புரியுமே ஆசீர் வதியுமே (கன்)

33 இராகம் தேசிக தோடி தாளம் ஏகம்
குருவானவா வாருந்தாயுமானவா யென்ற மெட்டு.

பல்லவி

அரூபியே அன்பு மிகுந்த ஞான சொரூபியே

அநுபல்லவி

ஆதியே பரஞ்சோதியே பிரக்யாதியே அருள் நிதியே

சரணம்

1 கருணைமிகுந்த போதா கடைக்கண் பாருமே தேவா
வருமையதனைக் கிருபையுடனே தருணம் வந்தெனக்கருள் புரியுமே

2 நீதிநெறி தவரா நித்திய கிருபாகரா
மேதினிதனிலாத ரவில்லாளுதியாகினேன் வாதனை தீரும் (அ)

3 மாசில்லா மருத்துவனே மாமரியின் சுதனே
காசினிவினை தீர்த்திட வுயிர்மாய்த்திட வுருவானயேசு அ

4 தாவீதின் சந்ததியே தருணமிது ததியே
பாவியுந்தனைக்கூவினேனருள் நேமி யெந்தனைக்கார்த்திடவாரும் அ

5 பாசமிகுந்தகோனே பண்பான உத்தமனே
தாசனுந்தனை நேசமாய்ப்பணிந்தோதிடுங் கவிக்காசீர்வதியும் அ

34 இராகம் தேசிக முகாரி தாளம் ஆதி
திருமால் மருமகனே என்ற மெட்டு

கண்ணிகள்

1 பாலா மனுவேலா
அனுகூலா குண சீலா இந்த
பாதகன் வினைகள் தீர
நீதமுடனே பணிந்தேன் பாலா

2 அருளே மறை பொருளே
திருவருளே யமுர்தகடலே தேவா

அம்பரனே யெந்தனுக்குத்
துன்பங்கள் வாராமல் காரும் அரு

3 வாசா பிரகாசா
ஜெகதீசா பரமேசா எந்தன்
வாதனை விலகிடவும்
நீதனே கிருபைசெய்யும் வாசா

4 நாதா மலர்பாதா
வரந்தாதா யேசுநாதா உம்மை
நம்பிடுஞ் சிறுவன்
தமிழ்க்குட் பதந்தரவொண்ணுதா பாலா

35 இராகம் பைரவி தாளம் ரூபகம்

கந்த நாதா இந்த வேளை காரய்யா யென்ற மெட்டு

ஏசுநாதா எந்தன் துயர்தீரய்யா
எளியேனுனையே மறவேன் மெய்யா ஏசு

அநுபல்லவி

பாசம் வைத்தென்னைப் பாதுகார்த்திடப்
பரமனே வுனதிருமலரடி பரிவுடனனுதினம் பணிந்தேனே ஏசு

சரணம்

குணமுடனிரு கரங்குவித்தேனே
மனமகிழ்ந்தருள் புரிகர்த்தனே
கணமதில் வினையெனை யனுகாமல் தின
மனுதினமுனைத் துதித்தேனே

தணவானே உனேயே ஞமறவேனே
சினமதுவாரம லே யெந்தனே
கார்த்து ரட்சித்தருள் செய்யும் கன்னிமரியாள் சுதனே
நேர்த்தியுடனே வுந்தனைப் பூர்த்தியாகப்போற்றினேனே ஏசு

---

36 இராகம் பார்வி தாளம் ஆதி
ஜப்தகலந்தரு யென்ற மெட்டு

கண்ணிகள்

1 தேவா உமதிரு யடிதனைக்காண
தேடினேனே மனம்
வாடினேனே உமைச்
சாடினேனே தேவா உம திரு

தொகையறு

சர்வாதி சர்வ லோகப்ரதாப நீதனே
சதாகாலமென்னைக்கார்த்திடும் பரிபூரணனே

பாட்டு

தினமனுதின மென்னை மனமகிழ்ந்தருள் புரி
திருச்சுதனே தீய
பாவிநானே தினந்
துதித்தேனே தேவா உமதிரு

2 நாதா வுனது பொர் ப்பாதாரமே கெதி
நம்பினேனே தினம்
வெம்பினேனே என
தம்பிரானே நாதாவுனது (தே)

தொகையரு.

ஏகசக்ராதிபதியாய் நிறைந்த ஜீவகாருண்ய கடவுளே
என்னாளுந் மெந்தனுக்குச் சிந்தனைவராமலே காக்கவரமருளே

பாட்டு

கலமுடனெளியவர் குலமதிலுதித்திட்ட
நாயகனே உந்தன்
சேயனெனைக் கண்
பார்குகனே காதாவுனது (தே)

---

37 இராகம் தேசிகம் தாளம் ஏகம்

சோமசேகரனருளும் பாலா வென்ற மெட்டு

பல்லவி

1 ஆதிமுதலான சோதி காதா நாதா இந்த
மேதினியை யாழுந்திருப் பாதா பாதா (ஆதி)

2 கன்னிமரியின் சுதனே காரும் காரும் நான்
பண்ணிய பாவமனைத்துந் தீரும் தீரும் (கன்னி)

3 பாவியான் படுந் துயரம் பாரும் பாரும் உம்மை
சேவித்தேன் வரமெனக்குத் தாரும் தாரும் (பாவி)

4 ஏழை யெந்தன் மீதிரங்கி வாரும் வாரும் இந்த
வேளையுந்தன் பாத மென்னைச் சேரும் சேரும் (ஏழை)

5 காசினியிலே சிறந்த பாலா பாலா எந்தன்
மாசில்லாக்கவிக்கருளுஞ் சீலா சீலா (ஆதி)

38 இராகம் தேசிக முகாரி தாளம் ரூபகம்
பெரியோரே காருமென்னை யென்ற மெட்டு

பல்லவி

கருத்தாவே காருமென்னை எந்தன்

அநுபல்லவி

வருத்தங்கள் நீங்கிட உருத்தாகவே யெண்ணி கரு

சரணம்

1 வஞ்சகமிருந்து நெஞ்சங்கலங்கினன்
தஞ்சமென்றுந்தனை அஞ்சலி புரிந்தேன் கரு

2 உத்தமபுத்திர சற்குண சீலனே
நித்தமுமுந்தனை நத்தியே வந்தேனே கரு

3 மாசற்ற சோதி திருத்துவக் குமாரா
நீசனெந்தனுக்கும் நித்ய சுகந்தர கரு

4 தேவாதி தேவனே திவ்ய சொரூபனே
பாவலன் யானுந்தன் பாதம் பணிந்தேனே கரு

(39) இராகம் ஆனந்த பைரவி தாளம் சாபு
மஞ்சுநிகர் குந்தள மின்னே யென்ற மெட்டு

கண்ணிகள்

1 தாவீதின் குலத்தி லுதித்தோனே
தாமோதரனே தயங்கினனே
தாழடி பணிந்தேன் சீமானே தேவா
தஞ்ச மென்றுன்னைக் கெஞ்சினே னுந்தன்
நெஞ்சமிறங்கியே சஞ்சலந் தீர்க்கத்

தாமிதமேனோ யின்னம் வாதா
தருணம் வா வா கிருபை நீதா
தாசனெந்தனுக் கருள் தா தா தாவீ

2 பாருலகை யாழ வந்தோனே
பராபரனே பணிந்தேனனே
பட்சமுட னண்டருள் கோனே இந்த
பாவியுந்தனைக் கூவினே னெந்தனே வினைலெந்த னுவி சோறுதே
பாதகன் வினைகள் தீரய்யா
பாலகனையா பண்புடன் மெய்யா
பாதுகார்த்தருளு மேசையா பாரு

3 மானிட ரூபந் தரித்தோனே
மனுவேலனே குண சீலனே
மாட்சிமை மிகுந்த பூமானே மண
மங்கள முடனே எங்கும்புகழ்ந்திட இங்கீர்தமுடனேசங்கீர்தம்பாட
மாசற்ற திருத்துவ லோலா
மாமரிபாலா மகிபனே சீலா
மைந்தனுக்கருளனு கூலா (மா)

---

40 இராகம் பார்வி தாளம் ஏகம்

தேவா திதேவா ஜெய வல்லவா யென்ற மெட்டு

கண்ணிகள்

1 ஆதிபராபர மெய்ஞ்ஞானமே
ஆனந்த சொரூப யதிசயமே
நீதியுடன் பணிந் தேனித்தமே
நித்யானந்தனே யெனைக் காருமே (ஆதி)

2 அகமகிழ்ந்தே யென்னையாழ் பரனே
யாருமில்லாத யனாதி நானே
ஜெகதலமீதினிலே பூமானே
சிறியனுக் கருள்புரியுஞ் சீமானே (ஆதி)

3 தஞ்சம் வேறில்லை தயா நீதியே
தாசனைக் காக்கத் தகுந்ததியே
நெஞ்சம் புண்ணாகி நொந்தேன் சோதியே
நீசனெந்தனுக்கும் நீ கெதியே (ஆதி)

41 இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்
மன்றுலாடியவா யென்ற மெட்டு

பல்லவி

வா வா வா சுதனே உன்னை

அநு பல்லவி

யாவலுடனே கணிந்து சேவடி பணிந்தேனின்று வா

சரணம்

1 மூவாதி முதல் மூல மந்திரமே
முத்தி கொடுத்தரு ளேழையந்தரமே
காவாயென்னையித் தருயின்னேரமே
கணமதில் வினையென்னை யனுகாமல்
குணமுடன் மணமகிழ்ந்தருள்தர (வா)

2 நித்தியானந்த நிமல சமர்த்தனே
நின்னடி தொழு தேன்தினங்கர்த்தனே
பத்திரசக் கீர்த்த னங்கள் படித்தனே
பதம்பெற நித மெனக்கருள் தாரும்
சதபெனு இதமுடன் துதித்தேனே (வா)

42 இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்
நாரதன் சொன்ன காரணப்படி யென்ற மெட்டு
கண்ணிகள்

2 மாசில்லா விசு வாசம் நிறைந்த
மகிபனே குணசீலா நர
மானிடர்க் கனுகூலா அன்னே
மாமரிக் குற்றபாலா மண
மங்களமுட னெங்கும் புகழும்
மாசற்ற மனுவேலா மாசி

2 பாதகன் வினை தீர்த்திடும்
பரிபூரண பரமேசா அரும்
பாவியான் ஜெகதீசா சிறு
[illegible]ாலனுக் கருளீசா இந்த
பாரினிலே நான் சீரில்லாமலே
பாதவிக் கின்றேனேசா பாத

3 தஞ்ச மென்றுன்னைக் கெஞ்சினேன் நானே
தாவீதின் குமாரனே இந்தத்
தாணி தனில் தானே என்னைத்
தயங்க விடாதே கோனே உந்தன்
தாசன்யானுமே நேசமாய்ப்பணிந்
தோதினேனே சீமானே மாசி

43 இராகம் காமாஸ் தாளம் ரூபகம்
அன்னையே நானுன்னை நம்பினேன் யென்ற மெட்டு
பல்லவி

இயேசு நாயகா எந்தன் ரட்சகா
இறைவனே கதி தருவாய் (இ)

அநுபல்லவி

பாசமிருந்த நேசக்குமாரா
நீசனுக்கருள் புரிகுவாய் (இ)

சரணம்

1 தேவநாத கீத மோதும் வேந்தனே குணசீலா
பாதகன் வினைதீர்த்திடும் பரிபூரண மனுவேலனே (இ)

2 கருணை புரியத் தருணமிதுவே கடைக்கண்பாருமேசையா
சிறுவனெந்தனின் வருமையதனை சீக்கிரம் வந்துதீரய்யா

3 தாலந்தனிலே சீலமுடனிவ் வேளை வந்தென்னைக்காருமே
பலனெந்தனை பாதுகார்த்திடச் சாலஞ்செய்யாமல் வாருமே

44 இராகம் தேசிகம் தாளம் ஆதி
பரங்கிரி வளர் பரனே யென்ற மெட்டு

கண்ணிகள்

1 அரூப சொரூப கிரு பாகர யோகா
திருவுருவாக வந்த தேவா மூவா
தினமனுதின முனைக் கணமுடன் துதி செய்தேன்
மனம் வைத்தருள் புரிந்திடவும் வாவா
உத்தமா வுனைப் பணிந்தேன் சத்தியந்தவறிடாமல்
சித்தம் வைத்து ரட்சியுமே கத்தினேன் கதியில்லாமல் அ

2 பாவிக்கிரங்கும் பரலோகநாதா
ஆவிக்குறிய யென தா தா நீதா
சதமெனநிதமுனை இதமுடன் தொழுதேனே
பதந்தாரும் பால வினோத போதா
நேசவிசுவாச நித்ய சத்ய சருவேஷனனே
தாசன் யானுமே துதிக்கும் மாசற்ற மருத்துவனே அ

45 இராகம் காமாசு தாளம் ஆதி
பாளைவாய் கமுகில் யென்ற மெட்டு

பல்லவி

1 சோதிமயமானயேசு நாதனேவுந்தனைக்காண
நீதியுடனே பணிந்தேன் காரய்யா அ
ஞதியாகினேன் கவலை தீரய்யா சோ

2 கொஞ்ச வயதினிலேயே பஞ்சம பாதகனுகி
சஞ்சல மிகவுண்டானேன் சேயனே எந்தன்
வஞ்சனையைத் தீர்த்தருளும் நாயனே கொ

3 காவினிற் களைத்துழைத்துக் கேவலமாகியே தானே
பாவி பதறியே வந்தேனய்யனே உம்மை
சேவித்தேன் ரட்சித்தருளு மெய்யனே காவி

4 உத்தம பாராபரனே சுத்தக்கிருஸ்தாதிபனே
நித்தமுந் துதித்தேன் பதந் தாருமே சிறு
பத்தனெனையுங் கடைக்கண் பாருமே சோ

---

46 இராகம் இந்துஸ்தான் பியாகு அடதாளம்
அம்பிகா உன் மகன் குகன் யென்ற மெட்டு

பல்லவி

ஆண்டவா அடியேனைக்காவா
வேண்டினேன் விமலனே தேவா ஆண்

அநுபல்லவி

1 சண்டாள ஞகினேனே
சற்குரு குணசீலனே
எண்டிசை தனிலே நானே
எதித்து மதித்து துதித்து போற்றினேனே ஆ

2 கன்னிமரியின் சுதனே
காரணந் தெரிந்த கோனே
உன்னித மாகத்தானே
உழைத்து களைத்து அழைத்துக் கெஞ்சினேனே ஆ

3 சாமி தயாபரனே
சாஸ்வதமாய் நம்பினேனே
காமி கலங்கினேனே
கதரி உதரிப் பதரியோடி வந்தேன் ஆ

4 சத்துக்குறைந்து நானே
சங்கடப் படுகின்றேனே
தத்துவமில் லாமல் தானே
தாவிக் கூவிப் பாவியண்டினேனே ஆ

---

47 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்
நான் சொன்னபடி கேளாய் என்ற மெட்டு

பல்லவி

1 கொடும் பார்வோனைச் சங்காரஞ் செய்தபரம் போதா
உந்தன் சீர்கமல பாதம் போற்றி நாதா நீதா—கொடும்

அநுபல்லவி

கார்த்து ரட்சித்தருளக் கருணைபுரியுந்தா தா
காமியும் நானே எந்தன்
சாமிநீ தானே இன்னுந்
தாமிதமேனோ கொடும்பார்வோனை

2 இந்த அகிலமெல்லா மாண்ட பரிபூரணனே
உந்தன் மகிமைதனையானறிந்து மகிழ்ந்தனனே
திகிலடைந்துமேதானே தியங்கிமயங்கி நானே
தேடினேன் பாவி துதி
பாடினேன் கூவி உன்னை
நாடினேன் மேவி இந்த அகில

3 உம்மை பத்தியுடனே துதித்தேன் பாதுகாரும்
எந்தன் சத்தியம் நிலைத்திடவே சாமி வாரும்
நித்திய மூனைப்பணியநின்னருளெனக்குத்தாரும்
நிமலனேகாவா எந்தன்
விமலனே தேவா யேசு
அமலனே வரவா உம்மை பத்தி (கொ)

48 வாரேனென்றுபோனாளந்த வஞ்சிவரக்காணேன் என்றமெட்டு.

கண்ணிகள்

1 கனகாசனபதியே யுந்தன் மனமே யுருகிடவே—அனு
தினமே உனை நினைந்தேனடி பணிந்தேனருள் பெறவே கன

2 அருமாமறைபுகழோதிடு மன்பா யெனக்காரும் இந்தத்
தருணமெனைக் கருணையுடன் வருமைதனைத் தீரும் அரு

3 வேதா கம போதா சரி நாதா குண நீதா—என்னைக்
காதாரமும் நீதா னென்று வந்தே னேசு நாதா வே

4 புவிமீதிலே துதிபோற்றியே புகழ்ந்தேன் பரமேசா என்றுந்
தவியாமலே கவி பாடிடத்தற்கார்த்தருள் நேசா—புவி கன

49 இராகம் இந்துஸ்தான் காபி தாளம் ஏகம்

ஆண்டவனே பழனியாண்டவனே யென்ற மெட்டு

பல்லவி

நாயகனே யேசு நாயகனே

அநுபல்லவி

ஆயர் மனையில் வந்து நேயமுடனே துதித்தநாம

சரணம்.

1 உத்தம பராபரனே உயர்குலபாலகனே
பத்தியுடன் யான் பணிந்தேன் பாது காத்திடுஞ் சீமானே
நத்தினேனுன்னையே சித்த மகிழ்வுடன்
மெத்தத் தயங்குறேன் பத்தனெனைக் காரும் நா

2 பாருலகெல்லாம் நடுங்க பாலவடிவான தேவா
ஆறுதலுடனெந்தனை யாதரித்தருள் தாவா
தாருமாரில்லாமல் கோரிடும் வரத்தைச்
சீருடனே தரச் செஞ்சரணஞ் செய்தேன் நா

3 எந்த நேரமுமுன்னை யேற்றியே தொழுதேனுனே
சிந்தை மகிழ்வுடனே சேவை தந்தாள்வாய் பூமானே
பந்த பாசத்துட னெந்தனுக் குகந்து
சொந்தமாக வந்த தந்தையாரும் நீ நா

50 இராகம் செஞ்சுருட்டி—தாளம் அடம்

வருவாய் சண்முகனே யென்ற மெட்டு

பல்லவி

கருணை செய்வாய் கன்னிமரியின் சேயே—கருணை

அநுபல்லவி

1 தருணமிதுததியே தாவீதின் சந்ததியே
சிறுவன் சிரங்குனிந்து செய்தேன் தினந்துதியே கரு

2 பாவிகள் துண்பந்தீர்க்க பாலவடிவங் கொண்டவா
கூவியழைத்தேன் தேவா கொற்றவா என்னைக்காவா கரு

3 சண்டாளனுகினேனே சற்குருகுணசீலனே
எண்டிசை தனில் நானே எப்போதும் போற்றினேனே கரு

4 பாசகுந்த போதா பட்சமறவாத நீதா
தாசனுக்கருள் தாதா தஞ்சமேசுவே நாதா கரு

---

51 இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி
பாருமுகமேனையா யென்ற மெட்டு

பல்லவி

இன்னுந்தயவுவல்லையா ஏழையின் மீது இன்னுந்

அநுபல்லவி

1 பின்னங்கள் வராமலே பேதை யெந்தனைக் காக்க
அன்னை மரிசுதனே யாதரித்தருள் தா
வாவா வரங் கொடுத்துக்
காவா கருணைமிகும்
மூவா முத்திகொடுக்கும்
தோவா திருப்பாதா இன்னுந்

2 பந்த பாசத்துடனே பாருலகமே சுற்றி
அந்தகருக் கொளியை யாவலுட னழித்த
நாதா நம்பினேன் மலர்ப்

பாதா பரமஞான
பேதா புகழ் பெருகும்
வேதா விமல நீதா—இன்னுங்

3 ஆவிபதறியே பாவியழைகின்றேன்
கூவியமைத்துமே கோடி செஞ்சரணம் செய்—தேன்
கோனே கோரினேன் வாங்
தானே தந்தருளுஞ் சீ
மானே மங்களம் பாடி
நானே வந்தேன் பூமானே இன்

52 இராகம் இங்கிலீஷ் நோட் தாளம் ஏகம்
பாரும் பறங்குன்றேனே யென்ற மெட்டு

பல்லவி

தேவா திவ்விய சொரூபா திருத்தேவா திவ்விய சொரூபா
பாவலன் பணிந்து பதம் பாடினேனருள் தா தேவா

அநுபல்லவி

புவனமதிலே மவுனமுடனே
தவத்தில் மிகுந்து பவத்தை தொலைத்த
புண்ணியபரா பரனே
கன்னிமரியின் சுதனே தேவா

சரணம்

1 சங்கை மிகுந்த சர்வேஷ்பரனே
எங்கும் புகழ் பெற்ற ப்ரகாசனே
துங்கமிகுந்த துய்யதீபனே
பங்கமில்லாத் தமிழ்பாடினேனே

மங்களமுட — னே மகிழ்ந்துன்னை
பொங்கமுடனே — போற்றினேனுன்னை
மாட்சிமை — மிகுந்த பாலா
காட்சிகொடுத் — தாளுஞ் சீலா (தே)

2 உத்தம புத்திர — சத்தியனே
சித்தமகிழ்வுட — னத்தினேனே
பத்தியதாகப் — பணிந்திட்டேனே
கத்திக் கத்திக் — கதறியும் நானே
கருணையுடனே — சிறுவனெந்தனே
பொருமைவைத்து — வருமையதனே
தீர்த்து யென்னைக் — கார்த்தருள
நேர்த்தியுட — னேதுதித்தேன் (தே)

53 இராகம் இந்துஸ்தான் காபி தாளம் ஆதி
பங்காயிலாஹி சாரீரா யென்ற மெட்டு

பல்லவி

கன்னிமரியின் பாலா — கார்த்தருள் சீலா — கன்

அநுபல்லவி

1 உன்னிதமாயுமே — உழைத்துநான் களைத்துமே
சென்னிகவிழ்ந்தேனே பாலா செய்யனுகூலா

2 வேத வினோதனே — வேண்டாமே சோதனே
ஆதரித்தாளுமே பாலா — ஆதியமலா (கன்)

3 எங்கும் புகழ்பெற்றவா — ஏசு ரட்சக தேவா
சங்கடந் தீர்த்திடும் பாலா — சம்மாமலோலா — கன்

4 பாதுகார்த்திடுங்கோனே — பரமதயாபரனே
வாது செய்யாமலே பாலா — வாரும் விமலா — கன்

54 இராகம் தேசிகதோடி தாளம் ஏகம்

செந்தாழம் பூவிந்தேன் கமழும் யென்ற மெட்டு

பல்லவி

அரூபசொரூப திருவுருவான
ஆதியே பரஞ் சோதியே

அநுபல்லவி

சிறுமைபடைந்து தானே
செஞ்சரணஞ் செய்தேனனே
சிந்தனை செய்யாதே வந்தேனை காப்பதே
உந்தனுக்குகந்த பந்தபாசமிதே அரு

சரணம்

1 உத்தம புத்திர சத்திய சருவ
நித்திய கிருபாகரா
பத்தியுடன் யான் பணிந்தேன்
பட்சமறவா திருந்தேன்
பாவலனெந்தனின் னலலைத் தீர்த்திட
காவலனாகவே தேவரீர் வாருமே அரு

2 வேதநாத கீத மோதும்
வேந்தனே குணசீலனே
ஆதார மேதுங் காணேன்
அடியேன் மனமும் நொந்தேன்
அச்சமில்லாமலே இச்சணம் வந்தேனை
நிச்சயமாகவே பட்சமுடன் பாரும் அரு

55 இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் சாப்பு
இந்த வுடலை நம்பியிருக்கலாமா என்ற மெட்டு

பல்லவி

ஆதிபராபர மெஞ்ஞானமே
அடியேனையுங்கார்க்க வேணுமே ஆதி

அநுபல்லவி

மேதினிதனில் வாடி
விமலாவுந்தனை நாடி
விதவிதமாகப் பாடி
விழுந்தேன் சரணங் கோடி ஆதி

சரணம்

1 மாதுகன்னிமா மரிபாலனே
மைந்தனெந்தனுக் கனுகூலனே
வாது செய்யாமல் தானே
வரந்தாருஞ் சீமானே
வருத்தம் வேண்டாம் பூமானே
வணங்கினேன் கோமானே ஆதி

2 எந்தநேரமுமுனை யே தொழுதேன்
ஏழையென்மேல் வர்மமும் வைதத்தேன்
சிந்தை களி கூறும்
சிறுவனெந்தனைக் காரும்
செய்த பிழையைத் தீரும்
சீக்கிற மருள் தாரும் ஆதி

---

56 இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்
அன்னமே உன்னையன்றி வேர் துணை யென்றமெட்டு

பல்லவி

வாருமே வரந் தாருமே வந்தென்
வறியன் வினைதனை த்தீருமே வாரு

அநுபல்லவி

கோரும் வரமதை நேரிலேதந்து
கொண்டனைத்து நீ காருமே
ஆருந்துணையில்லை யடியனெந்தனை
யாதரித்தருள் புரியுமே வாரு

சரணம்

1 தாலந்தனிலேயிவ் வேளை வந்தெனைத்
தாபரித்திடுஞ் சீமானே
பாலனந்தனை ஜாலஞ் செய்யயாமல்
பாதுகார்த்திடும் பரமனே வாரு

2 அருமறை புராண மாகம விதிக
ளனைத்துமேயறிந்த யாளனே
சிறுவனின் துயர் சீக்கிறந்தீர்க்க
சிந்தனை செய்யாதே சீலனே வாரு

---

57 இராகம் இந்துஸ்தான்| உஷி தாளம் ஆதி

அடங்கலுஞ் ஜெக சோதி யென்ற மெட்டு

கண்ணிகள்

ஞான மீதினிலே சிறந்தோங்கியே
தானுயுதித்த சத்ய
நித்யகிருபா கரனே
நின்னடி தொழுதேன்
முத்தி தருவாய் சீலனே ஞான

ஞாயம் தீர்க்க மாயமாகவே
நேயமுடனே வந் தாயர்குலமதில் தா

நத்தினே னித்தமுஞ் சித்தமிகுத்தரு
ளுத்தம புத்திரா எத்திசை புகழ்ந்திடத் தா

நம்பித்தானே கும்பிட்டேனே
தம்பிரானே வெம்பி நானே தா

எங்கும் புகழ்ந்திட மங்களமாகவே
திங்கள் பிறைபோலே பங்க மில்லாலே தா

பாவிதானே சேவித்தேனே
கூவியழைத்தேன் பூவினிலே தா

பரமனே வுன்திரு பதமலரடி தனே
கரமதிலேந்தியே சிரமணிந்தே கொள்ளத் தா

நாடினே னுன்னே நறுமலர் சூடிட
பாடினேன் பதம் பலருங் கொண்டாடிடத் தா

பாசமிகுந்திடும் நேசக்குமாரனே
தாசனெந்தனின் வாசனைகேட்டிடத் தா

---

58 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி
பாண்டிய னீன்ற மீனுக்ஷி யென்ற மெட்டு

பல்லவி

மாமரியா ளீன்ற பாலா மாசு
மறுவில்லாச் சீல

அநு பல்லவி

தாமதமேன் மனுவேலா உந்தன்
தஞ்சமனு கூலா மாமரி

தொகையரு

தாவீதின் சந்ததியே மேவிப்பிறந்திந்தத் தாரணியில்
பாவிக்காய் ஜீவனைக் கொடுத்து பாடுபட்டீர் | சிலுவைதனில்

பாட்டு

2 ஆண்டவா அடியேனைக்காவா உந்த
னாசீர் வாதந்தா

தொகையரு

வேதாந்த விநோத வித்யாப்ரசங்க விமல திருவுருவே
ஆதாமேவையின் பாவத்துக்காகவே சாபத்தையழி அமலகுருவே

பாட்டு

3 பஞ்சம பாதக நானே பூமானே
பதறி வந் தேனே
சஞ்சலந் தீர்த்திடுங்கோனே சீமானே
சமயமிது தானே மாமரி

59 இராகம் தேசிகதோடி தாளம் ஆதி
கண்ணே யுன்னை யான்தேடி யென்ற மெட்டு

பல்லவி

ஏசுவேயெந்தனை யாளு
ஏழையுந்தனின் தாளையுமடி பணிந்தேன்
வேளைவந்த ருள்புரியும் ஏசு

அநுபல்லவி

1 பாசமிகுந்த மா மரிபாலா என்னை
பாதுகார்த்து ரட்சியு மனுகூலா
நேசம் நிறைந்த நித்யகுணசீலா
நித்தமுந்துதித்தேனே மனுவேலா ஏசு

2 சோதனை செய்யாதே பூமானே எந்தன்
துயர்தனைத் தீர்த்திடுஞ் சீமானே
வாதனையடைந்துமே வணங்கினேனே உந்தன்
வரந்தர வேணுமே கோமானே ஏசு

3 ஜெகமெட்டு திசையெங்கும் பெயர் பெற்றவா எந்தன்
ஜீவனுள்ளவரைக்குங் கார்த்திடவா
அகமகிழ்ந்தே யென்னை யாண்டிடவா உந்த
னுசீர் வாதம் பெறவே யழைத்தேன் தேவா ஏசு

---

60 இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்
பொன்னார் மேனியனே யென்ற மெட்டு

கண்ணிகள்

1 அன்னை மரி சுதனே—என்னை
யாளுந்தயா பரனே
உன்னையே நம்பினேனே மன
துள்ளமுரு கினேனே

2 தாவீதின் சந்ததியே உந்தன்
தஞ்சமருள் ததியே
பாவியான் பரஞ்சோதியே மலர்
பாதா வுந்தன் கெதியே அன்னை

3 சித்தமிறங் கலையோ உந்தன்
செவிதான் கேட்கலையோ
பத்தன் படுந் தொல்லையோ அதைப்
பார்க்க மனம் வல்லையோ அன்னை

---

61 இராகம் இந்துஸ்தான் சுருட்டி தாளம் ஆதி
இனிநமக்கேம பயமேது யென்ற மெட்டு

பல்லவி

நமக்கினித் துன்பம் வாராது யேசு
நாதனருளிருக்கும் போது நமக்

அநுபல்லவி

1 தீவினை நாசர் திவ்வியப்ரகாசர்
திருமனுவேலராய் மறு ரூப மான தால் நமக்

2 நித்ய பிதாவின் சத்ய சருவேஷன்
நிமலனூர் பிறந்திட நீநிலஞ் செழித்தால் நமக்

3 பாவிகள் நேசர் பரலோக வாசர்
பாலவடிவமாக கோலங்கொண்டமைந்ததால் நமக்

4 மகிமைப்ரதாபன் மாசற்ற திருத்துவன்
மன்னுயிர்க்காகவே தன்னுயிர் விடுத்ததால் நமக்

6 தாரணியிலுள்ளோர் வேறெண்ணங் கொள்ளாமல்
தாசன்மனுவேல் கவிநேசமாய்த்துதித்ததால்நமக்

62 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி
தேவா சம்போ சிவா யென்ற மெட்டு

பல்லவி

தேவா திவ்ய சொரூபா
திருவுரு வாக வந்த தீனரட்சகா
காவா கதிதா வா
கன்னிமரிபாலனாக வந்துதித்தவா தேவா

அநுபல்லவி

1 தாட்டிகத்துடனே வந்து மாட்டுக்கொட்டலில் பிறந்த
ஆட்டிடையர்கள் பணிந்து மேட்டிமையாகச்சிறந்த
கோட்டி செய்தே யூதர் குற்றஞ் சாட்டியே உயிர்துறந்த
கோமானே சீமானே எந்தன்
பூமானே புகழ்தேனானே தேவா

2 ஆகா அருள் தாவா
ஆதாமேவை பாவத்திற்கு சாபந் தீர்த்தவா
ஏகோவா தேவா
எங்களேசுநாதராக வந்த மூவா
அந்தகனுக்கொளிதனை யாவலுடன் தந்தவனே
விந்தையுடன் குஷ்டரோக வியாதிகளை தீர்த்தவனே
சிந்தையுடன் பாவிக்காக ஜீவனைக் கொடுத்தவனே
சீலனே கோலனே மனு
வேலனுக்கனுகூலனே தேவா

## மங்களம்

இராகம் சுருட்டி தாளம் ஆதி

மாவும் கோய்யாவும் யென்ற மெட்டு

கண்ணிகள்

1 ஆதிசர்வேஷனுக்கும் அகிலப்ரகாசனுக்கும்
அருள் மங்களம் நாளுந் திருமங்களம்

2 தினதயாளருக்கும் திருமனுவேலர்க்கும்
தினமங்களம் பொன் னடி மங்களம்

3 மாமரிசுதனுக்கும் மானுபிமானனுக்கும்
மணமங்களம் நல்ல குண மங்களம்

4 பாடியுலகின் மீது பரவச் செய்பவர்களின்
பத மங்களம் என்றுஞ் சுபமங்களம்

5 தாரணியிற் சுயமய்ச் சீரிசைத்தமனுவேல்
தமிழ் மங்களம் அனு தின மங்களம்

தேவ நாம சங்கீர்த்தனம்.

தேவா தேவா

சுபம் சுபம் சுபம்

முற்றிற்று.